


03.03.2025 - 1.45 PM

தலைப்பு செய்திகள்

- தமிழ்நாட்டில் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மொழிதாளுடன் இன்று தொடங்கின.
- கோவையில் மனித விலங்கு மோதல் தடுப்பு மேலாண்மைக்கான அறிவுசார் மையத்தை பிரதமர் திரு. நரேந்திரமோடி இன்று துவக்கிவைத்தார்.
- நம்நாடு இன்னும் 2 ஆண்டுகளில் 3-வது பொருளாதார நாடாக வளர்ச்சிபெறும் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
- நாகை மாவட்டம் வேதாரண்யம் தலைஞாயிறில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- அமெரிக்க Mountain West உள்ளரங்கு குண்டெறிதல் பிரிவில் இந்தியாவின் கிருஷ்ணா ஜெய்சங்கர் வெண்கல பதக்கத்தை வென்றுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

12-ம் வகுப்பு

தமிழ்நாட்டில் 12-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மொழிதாளுடன் இன்று தொடங்கின.

மாநிலம் முழுவதும் 3 ஆயிரத்து 316 தேர்வு மையங்களில், 8 லட்சத்து 21 ஆயிரத்து 57 மாணாக்கர் +2 தேர்வை எழுதுகின்றனர்.

தேர்வு மையங்களை 4 ஆயிரத்து 470 பறக்கும்படையினர் கண்காணிக்கும் நிலையில் 43 ஆயிரத்து 446 ஆசிரியர்கள் தேர்வறை பணிகளை மேற்கொள்கின்றனர்.

பொதுத்தேர்வு எழுதும் மாணாக்கருக்கு தமிழக ஆளுநர் திரு. R.N. ரவி,

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.

மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ்பொய்யாமொழி நாகை நகராட்சியில் உள்ள நடராஜன் தமயந்தி பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பொதுத்தேர்வு ஏற்பாடுகளை இன்று பார்வையிட்டதோடு தேர்வெழுதும் மாணாக்கரை வாழ்த்தி வழியனுப்பினார்.

திருச்சி உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சித்தலைவர்கள் தேர்வெழுதும் மையங்களை இன்று பார்வையிட்டு ஆய்வுசெய்தனர்.

இதனிடையே மொழிதாள் தேர்வு குறித்து தேர்வெழுதிய மாணாக்கர் எமது செய்திபிரிவிடம் பேசுகையில்

.. வாய்ஸ் ..

வரும் 25-ம் தேதிவரை +2 தேர்வுகள் நடைபெறுகின்றன.

11ம் வகுப்பு தேர்வுகள் நாளைமறுநாளும்,

10-ம் வகுப்பு பொதுத்தேர்வுகள் இம்மாதம் 28-ம் தேதியும் தொடங்குகின்றன.

❖❖❖❖❖❖

பிரதமர்

உலக வன விலங்குகள் பாதுகாப்பு தினம் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி குஜராத் மாநிலம் ஜுனகத் மாவட்டத்தின் சசன்கர் வனத்தில், வனவிலங்கு தேசிய வாரிய கூட்டத்தில் இன்று பங்கேற்றார்.

மத்திய சுற்றுச்சூழல் வனத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ், பல்வேறு மாநிலங்களின் வனத்துறை பிரதிநிதிகள், தன்னார்வலர்கள் உள்ளிட்டோர் இதில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக பிரதமர் காணொலி வாயிலாக ஜுனகத் தேசிய மறுவாழ்வு மையத்திற்கு அடிக்கல் நாட்டியதோடு, 16-வது ஆசிய சிங்கங்களின் கணக்கெடுப்பு பணிகளையும் துவக்கி வைத்தார்.

மேலும் கோவை சலீம் அலி இயற்கை பறவைகள் மையத்தில் மனித மிருக மோதல் மேலாண்மை பிரிவையும் தொடங்கிவைத்தார்.

முன்னதாக பிரதமர் கிர் தேசிய பூங்காவில் வனசவாரி மேற்கொண்டதுடன் மரக்கன்று நடும் நிகழ்ச்சியிலும் பங்கேற்றார்.

வனவிலங்கு பாதுகாப்பு பணி மேற்கொள்ளும களை அலுவலர்களுக்கு இருசக்கர ரோந்து வாகனங்கள் வழங்கும் திட்டத்தையும் பிரதமர் தொடங்கிவைத்தார்.

அப்பூங்காவின் சுற்றுசூழல் வழிகாட்டுநர்கள், கள அலுவலர்களுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

❖❖❖❖❖❖

வனவிலங்கு தொடர்ச்சி

இந்நிலையில் வனவிலங்குகளை பாதுகாத்து பராமரிப்பதற்கான விரிவான கொள்கைகள், சட்ட நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை மத்திய சுற்றுச்சூழல், வனம், காலநிலை மாற்றத்துறை அமைச்சகம் மேற்கொண்டுள்ளது.

பல்லுயிர் பெருக்க நாடாக இந்தியா அங்கீகரிக்கப் பட்டுள்ள நிலையில், நம்நாட்டில் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாதுகாக்கப்பட்ட வன பகுதிகளின் மேம்பாட்டிற்காக 3 ஆயிரத்து 412 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட நிதி பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்டுள்ளது.

இது சென்ற நிதியாண்டை காட்டிலும் 9 சதவிகிதம் கூடுதலாகும்.

இதுதவிர மத்திய அரசின் ஒருங்கிணைந்த வனவிலங்குகள் வாழ்விட மேம்பாட்டு திட்டத்திற்காக
450 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது.

பிரதமரின், அன்னையின் பெயரில் மரம் வளர்ப்போம் திட்டம் தொடங்கப்பட்டதன் மூலம் தாயின் பெயரில் மரம்வளர்க்கும் திட்டத்தின் மூலம் சுற்றுச்சூழலுக்கான பசுமை பங்களிப்பிற்கும் மத்திய அரசு வழிகோலியுள்ளது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖

ராஜ்நாத்சிங்

நம்நாடு இன்னும் 2 ஆண்டுகளில் 3-வது பொருளாதார நாடாக வளர்ச்சிபெறும் பாதையில் செல்வதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் முப்படைகளின் கொடிநாள் தினம் தொடர்பான பெருநிறுவன சமூக பொறுப்புணர்வு திட்ட மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், நாட்டின் பொருளாதார வளர்ச்சியை பொது மற்றும் தனியார் நிறுவனங்கள் உறுதி செய்வதாக குறிப்பிட்டார்.

பொருளாதார சுதந்திர பாதையில் இந்தியா முன்னேறி செல்லும் இத்தருணத்தில் சுயசார்பு பாரதம் முக்கிய பங்காற்றுவதாக கூறினார்.

பாதுகாப்பு தொழில் துறையில் தனியார் துறைகள் பங்கேற்றால் தான் தேசிய பாதுகாப்பில் தன்னிறைவை எட்டமுடியும் என்றும் திரு.ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

இந்தியாவின் தனிநபர் வருமானம் தொடர்ந்து அதிகரித்து வருவது குறித்து மகிழ்ச்சி தெரிவித்த அவர், இது தேச வளர்ச்சியை பிரதிபலிப்பதாக சுட்டிக்காட்டினார்.

நாட்டின் எல்லை பகுதிகளை கருத்துடன் பாதுகாக்கும் படைவீரர்களின் அர்ப்பணிப்புமிகு சேவையையும் அமைச்சர் பாராட்டினார்.

❖❖❖❖❖❖

எஸ்.ஜெய்சங்கர்

இந்தியாவின் வரலாற்று பெருமை குறித்து பெல்ஜியம் நாட்டின் துணை பிரதமர் Maxim Prevot -டிடம் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இன்று விரிவாக எடுத்துரைத்தார்

புதுதில்லியில் இருவருக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து இதனைத் தெரிவித்த டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், இருநாடுகளும் வர்த்தகம், தொழில், கல்வி, படைப்பாற்றல் திறன், கலாச்சார பிரிவுகளில் நிலையான நட்புறவு கொண்ட நாடுகளாக திகழ்வதாக குறிப்பிட்டார்.

செமி கண்டக்டர், செயற்கை நுண்ணறிவு, தூய்மை எரிசக்தி பிரிவுகளிலும் இரு நாடுகளும் இணைந்து செயலாற்றுவதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாகவும் அவர் கூறினார்.

டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இன்று பிற்பகல் பெல்ஜிய நாட்டு இளவரசி Astrid-யை புதுதில்லியில் சந்தித்து பேசுகிறார்.

❖❖❖❖❖❖

உச்சநீதிமன்றம்

நீதியியல் பணிகளில் பார்வை குறைபாடுடைய மாற்றுத்திறனாளிகளை பணியமர்த்தலாம் என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இதுதொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த நீதிபதிகள் ஜே.பி. பர்திவாலா, ஆர்.மகாதேவன் கொண்ட அமர்வு நீதித்துறை பணியிட வேலை வாய்ப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு எந்த பாகுபாடும் கூடாது என்று அறிவுறுத்தியுள்ளது.

மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய பணி வரையறையை மாநிலங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும் நீதிமன்றம் கூறியுள்ளது.

மத்திய பிரதேச மாநில நீதியியல் சேவை சட்டப்பிரிவு 1994-ன் கீழ் பார்வை குறைபாடுடையவர்களை பணியமர்த்த விதிக்கப்பட்டிருந்த தடையின் மீது உச்சநீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது.

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

நாகை மாவட்டம் வேதாரண்யம் தலைஞாயிறு பகுதி இளைஞர்கள் பயன்பெறும் வகையில் 420 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

நாகை மாவட்டத்தில் 139 கோடியே 92 லட்சம் ரூபாய் மதிப்பிலான 35 முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்ததோடு, 83 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 206 புதிய திட்டப்பணிகளுக்கும் அடிக்கல் நாட்டி பேசியஅவர், விழுந்தமாவடி, வானமா மகாதேவி பகுதிகளில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மீன்பிடி இறங்குதளம் அமைக்கப்படும் என்றார்.

.. வாய்ஸ் ..

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் தொடர் பிரச்சனையில் பிரதமர் தலையிட்டு உடனடியாக தீர்வுகாண வேண்டுமென முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖

தூத்துக்குடி வாய்ஸ்

உலக செவித்திறன் தினத்தை முன்னிட்டு தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை சார்பில் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது

ஏராளமான மருத்துவர்கள், செவிலியர்கள், மாணவ மாணவிகள் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

சேலம் காசநோய்

காசநோய் இல்லாத சேலம் மாவட்டத்தை உருவாக்கும் மத்திய அரசின் நிக்சய் சிபிர் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக மாவட்ட காசநோய் மைய மருத்துவ அலுவலர் திரு.கணேஷ் குமார் தெரிவித்திருக்கிறார்.

❖❖❖❖❖❖

தொப்பையாறு

தர்மபுரி மாவட்டம் தொப்பையாறு அணையிலிருந்து பாசனத்திற்காக 266 மில்லியன் கனஅடி தண்ணீரை ஆட்சித்தலைவர் திரு. சதீஷ் இன்று விடுவித்தார்.

70 நாட்களுக்கு விடுவிக்கப்படும் இந்த தண்ணீரின் மூலம் தர்மபுரி மாவட்டத்தில் 2 ஆயிரத்து 50 ஏக்கர் நிலமும்,

சேலம் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 280 ஏக்கர் நிலமும் பாசனவசதி பெறும்.

நீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக விளைச்சல் பெறுமாறு ஆட்சித்தலைவர் கேட்டுக்கொண்டார்.

விழுப்புரம் மாவட்டம் வீடூர் அணையிலிருந்து பாசனத்திற்காக இன்றுமுதல் தண்ணீர் திறக்கப்பட உள்ளது.

❖❖❖❖❖❖

மாசி பிரம்மோற்சவம்

தமிழ்நாட்டில் பல்வேறு திருக்கோவில்களில் மாசிமாத பிரம்மோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

திருச்செந்தூர், திருத்தணி அருள்மிகு சுப்ரமணிய சுவாமி, காஞ்சிபுரம் காமாட்சியம்மன், திருமழப்பாடி வைத்தியநாத சுவாமி திருக்கோவில்களில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

❖❖❖❖❖❖

குண்டெறிதல்

2025 அமெரிக்கா Mountain West உள்ளரங்கு கள சாம்பியன் பட்ட போட்டியின் குண்டெறிதல் பிரிவில் 16.03 மீட்டர் தூரத்திற்கு குண்டெறிந்து வெண்கல பதக்கத்தை இந்தியாவின் கிருஷ்ணா ஜெய்சங்கர் வென்றுள்ளார்.

இதன்மூலம் உள்ளரங்கு குண்டெறிதல் பிரிவில் 16 மீட்டரை தாண்டிய முதல் இந்திய பெண் என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

❖❖❖❖❖❖

கிரிக்கெட்

மகளிர் பிரீமியர் லீக் 20-20 கிரிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்றிரவு ஏழரை மணிக்கு யூ.பி. வாரியர்ஸ் - குஜராத் ஜெயன்ட்ஸை எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.